**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். ப. முரளி அர்த்தனாரி Ph.D.,
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர், தேதி: 17.03.2022
ஆசிரியர்,

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் காலநிலை மாற்றத்திற்கு உகந்த வேளாண் உற்பத்தி உத்திகள் குறித்த சர்வ தேச மாநாடு**

இன்று 17 மார்ச், 22 சர்வதேச அளவிளான கருத்தரங்கு நடைபெற்றது இத்துவக்க விழாவில், பேராசிரியர் மற்றும் தலைவர் காலநிலை ஆராய்ச்சி மைய ஒருகிணைப்பாளர் முனைவர் சுப. ராமநாதன் அவர்கள் வரவேற்புரையாற்றி கருத்தரங்கை துவக்கிவைத்தார்.

இக்கருத்தரங்கின் தலைவர் மற்றும் இயக்குனருமான வே. கீதாலட்சுமி அவர்கள் இந்த சர்வதேச அளவிளான கருத்தரங்கின் முக்கியதுவமான காலநிலை மற்றம் பயிர் உற்பத்தி உழவியல் தொழில்நுட்பங்கள், அங்கக வேளாண் தொழில்நுட்ப உத்திகள் மற்றும் கொள்கைகள், பயிர்வினையியல் தொழில்நுட்பங்கள் மூலம் மகசூல் அதிகரிப்பு போன்றவற்றின் முக்கியத்துவத்தை விரிவாக எடுத்துரைத்தார்.

முதுகலை பட்டபடிப்பு முதன்மையர் ஜெ.எஸ். கென்னடி அவர்கள், இந்த கருத்தரங்கின் போது, இக்காலகட்டத்திற்கு ஏற்ற நீர்நிலை மேலாண்மையும் மண்வள பாதுகாப்பு பற்றியும் ஏடுத்துரைத்தார். மேலும் இக்கருதரங்கு நடைபெற நிதியுதவியும் அளித்துள்ளார்.

பல்கலைக்கழக ஆராய்ச்சி இயக்குனர் முனைவர் கே.எஸ்.சுப்பிரமணியன் சிறப்புரையாற்றினார். அவர் இயற்கை சார்ந்த வளங்களை பாதுகாக்கவும், இந்த காலகட்டதிற்கு மிகவும் அவசியமான தானியங்கி வானிலை மையத்தின் பயன்பாட்டினையும் அதன் முக்கியதுவத்தை பற்றியும் கூறினார். காலநிலைக்கேற்ற விதையும் விதை பராமரிப்பும், வறட்சி தாங்கி வளரக்கூடிய பயிர்களும், தொலைதூர தொழிடல்நுட்பங்கள் பயிர் உற்பத்தியில் பயன்படுத்த வேண்டும் என்பதனையும் கூறினார்.

பல்கலைகழக பதிவாளர் மற்றும் செயல் துணைவேந்தர் அ.சு. கிருட்டிணமூர்த்தி அவர்கள் தலைமையுரையாற்றி பஞ்ச பூதங்களான நீர், நிலம், காற்று, ஆகாயம், நெருப்பு ஆகியவற்றை பாதுக்காக்கவும் மாசுபடாதவாரும் இயற்கை வேளாண்மை தொழில்நுட்ப உத்திகளை கடைபிடிக்க வேண்டுமென்று வழியுறித்தினார்.

மேலும் இக்கருத்தரங்கின் போது ஆராய்ச்சி கட்டுரை தொகுப்பு புத்தகத்தையும் மற்றும் கையேடுகளான அங்கக வேளாண்மை, தொழில்நுட்பம் சார்ந்த மண்புழு தயாரிப்பு, பயிர்சத்து மேலாண்மை (காணொளி தொகுப்பு) ஆகியவற்றை விவசாயிகளுக்கும் வேளாண் விஞ்ஞானிகளுக்கும் பயண்படுத்துவதற்க்காக புத்தகங்களை வெளியிட்டனர். முதன்மை பேச்சாளரான முனைவர் பிருடின் ஜெ. மோஹாபத்ரா (டைரக்டர் ஜெனரல்) புதுடில்லி, அவர்கள் காலநிலை இடர் மேலாண்மை பற்றி விரிவாக பேசினார்.

பேராசிரியர் மற்றும் தலைவர் சி.ஆர். சின்னமுத்து அவர்கள் இந்த சர்வ தேச கருத்தரங்கில் நன்றியுரையாற்றினார். மேலும் பல்கலைக்கழக அதிகாரிகள், துணை தலைவர்கள், பேராசியர்கள் மற்றம் ஆராய்ச்சி மாணவர்கள் உள்பட 300க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

மக்கள் தொடர்பு அலுவலர்